1990 சனவரி 25]

## நாகையில் தீண்டாமை குற்றவியல் நீதிமன்றப் பிரிவு

*3417 திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) நாகையில் தீண்டாமை குற்றவியல் நீதிமன்றப் பிரிவு துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் ஒரே ஒரு தீண்டாமை குற்றவியல் நீதிமன்றம் தான் இருக்கிறது. அந்த மாவட்டம் முழுவதிலுமிருந்து அந்த நீதிமன்றத்திற்குத்தான் வரவேண்டியிருப்பதால் அங்கே வருவதற்கு ஏற்படும் சிரமத்தோடு உடனுக்குடன் வழக்குகள் பைசல் ஆகாத சிரமங்களும் இருக்கின்றன. எனவே நாகையிலேயே ஒரு தீண்டாமை குற்றவியல் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று முன்பு பரிசீலனை செய்யப்பட்ட நிலைமையிலே இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். எனவே இதையாவது—அதாவது நான் இப்போது கேட்டதையாவது ஒரு கோரிக்கையாக ஏற்று அதனைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவியல் சட்டப்படி தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியின மக்களின் வழக்குகளை விசாரிப்பதற்காக கும்பகோணம், திருநெல்வேலி, திருச்சி, மதுரை ஆகிய இடங்களில் 1982 ஆம் ஆண்டு முதல் வழக்கு மன்றங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் நாகைப்பட்டினம், பண்ருட்டி,

கோயம்புத்தூர், செங்கற்பட்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி வழக்குகளை விசாரிப்பதற்கான ஒரு செயற்குறிப்பு ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் அதை நடத்துவதற்கு ஆண்டு ஒன்றுக்கு 8.2 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டு, நிதிநிலை காரணமாக அது கைவிடப்பட்டு விட்டது. 1985 ஆம் ஆண்டில் தலைமைச் செயலாளரால் டெல்லியில் கூட்டப்பட்ட கூட்டத்தில் Petty offences என்கின்ற சிறு குற்றங்களை விசாரிப்பதற்காக சில நீதிமன்றங்களை அமைக்கலாம் என்ற குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டது. அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அப்படி Petty offences நீதி மன்றங்கள் அமைக்கப்படுமானால் அந்த வழக்கு மன்றத்திலேயே இந்த பி.சி.ஆர். வழக்குகளையும் விசாரிக்கலாம் என்ற ஒரு கருத்து இருக்கிறது. இப்போது ஏற்பட்டிருக்கிற நிலைமையில் எல்லா நீதிமன்றங்களும் First Class Magistrate Court-களாக மாற்றப்பட்டு இருக்கின்றன. எனவே இந்த வழக்குகளையும் அந்த First Class Magistrate Court-லேயே விசாரிக்கலாமா என்ற ஒரு குறிப்பும் ஆய்வில் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் பி.சி.ஆர். வழக்குகளையும் விரைவில் நடத்தி முடிக்க வேண்டும் என்று தான் அரசாங்கமும் கருதுகிறது. எனவே தான் முன்னுரிமை அளித்து அந்த First Class Magistrate Court-லேயே இந்த பி.சி.ஆர். வழக்குகளை விசாரித்து பைசல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் கவனத்தில் கொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் முழுவதற்கும் சேர்த்து ஒரே ஒரு நீதிமன்றம் இருப்பதால் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. இதனால் ஏழைகள் தொடர்ந்து அல்லல்படுகிறார்கள். அவர்கள் கஷ்டத்திற்கும் சேதத்திற்கும் ஆளாகிறார்கள். போக்குவரத்துச் செலவு ஏற்படுகிற அதே நேரத்தில் வேலை இழப்பினால் வருவாய் இழப்பும் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட சிரமத்தில் இருக்கக்கூடிய அந்த ஏழைகளுக்கு உதவி செய்யக் கூடிய முறையில் அரசின் நிதி நிலையினை மட்டும் கவனத்தில் கொள்ளாமல் ஏழை எளிய மக்களின் சிரமங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு முன்னுரிமை கொடுத்து அதை ஏற்படுத்துவதற்கு முயற்சிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் மாவட்டத்தில் ஓரிடத்தில் இந்த நீதி மன்றம் இருப்பதால் சிரமங்கள் ஏற்படுகின்றன என்பது உண்மை.

1990 சனவரி 25]

எனவேதான் இப்போது மாவட்டத்தில் அமைந்திருக்கின்ற எல்லா வழக்கு மன்றங்களும் First Class Court-ஆக அமைந்துவிட்டன. First Class என்ற அளவில் அதிகாரம் அவற்றுக்குக் கொடுக்கப்படுகிறது. எனவே அந்த வழக்குகளை ஓரிடத்தில் வைத்து விசாரிப்பதற்குப் பதிலாக அந்தந்தப் பகுதி First Class Courtகளுக்கு அனுப்பலாமா என்ற நிலையும் பரிசீலனையில் இருக்கிறது. எனவே ஏழை மக்களின் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொளகிறேன்,

கரூர், திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி ரயில்பாதை அமைத்தல்

* 2208 திரு. செங்கைசிவம், திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரூர், திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி ரயில் பாதை அமைக்க மத்திய அரசிடம் தமிழக அரசு வற்புறுத்தி வருகிறதா?

(ஆ) 1982 முதல் இது பற்றி மத்திய அரசிடமிருந்து ஏதேனும் குறிப்பைத் தமிழக அரசு பெற்றதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்திற்கு வரும் ஆண்டுகளில் மேலும் அதிக நிதி ஒதுக்கப்படும் என இரயில்வே அமைச்சகத்தால் கூறப்பட்டுள்ளது.

9.20. மணி

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத் திட்டத்திற்கு நடப்பாண்டு அதிக நிதி உதவி ஒதுக்கப்படும் என்று மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்தார்கள். ஆகவே இந்தத் திட்டம்—1982-லே இருந்து தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருவதால்—மிக அதிவேகமாக முடிவடைய வேண்டும். அந்த வகையிலே மேலும் அதிக உதவி பெற வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.